சட்டக் கல்லூரி அமைத்திடுவீர்! போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்த

திருப்பத்தூர் நகரில் உயர்மட்ட மேம்பாலம் அமைத்திட வேண்டும்!

பேரவையில் – கழக உறுப்பினர் அ.நல்லதம்பி வலியுறுத்தல்!

சென்னை, மார்ச் 28-

திருப்பத்தூர் நகரில் போக்கு வரத்து நெரிசலைக் கட்டுப்படுத்த தூய நெஞ்சக் கல்லூரி முதல் தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய சாலை வரை உயர்மட்ட மேம்பாலம் அமைத்திட வேண்டும் என்று சட்டப்பேரவையில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மானியத்தின் மீது திருப்பத்தூர் தொகுதி கழக உறுப்பினர் அ.நல்லதம்பி பேசுகையில் வலியுறுத்தினார்.

அ.நல்லதம்பி பேசியது வருமாறு :-

பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் புகழ்போற்றி வணங்குகிறேன். தொலைநோக்கு திட்டங்களின் பாடசாலையாகவும், ஒன்றிய அரசிற்கும், மற்ற மாநிலங்களுக்கும் வழிகாட்டியாக, கொண்ட கொள்கையில் உறுதியாகவும், எதிரிகளுக்கு தணலாக, தமிழர்களுக்கு தயாகாவும், தந்தையாகவும் விளங்கும் விந்தையே! முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன். பாசமிகு தலைவரின் படை வரிசையில், இளைய தலைமுறையின் இளம் தலைவர், துணை முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன். அவை முன்னவர், நீர்வளத் துறை அமைச்சர் அவர்களையும், பொதுப் பணித் துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களையும், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். பேரவைத் துணைத் தலைவர் அவர்கள், அமைச்சர் பெருமக்கள், அரசு கொறடா உள்ளிட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், அனைத்து அலுவலர்களையும் வணங்குகிறேன்.

சொன்னதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம், சொல்லாத மக்கள் போற்றும் நற்பல திட்டங்களை செய்வோம் என விடியல் ஆட்சியின் வெற்றிப் பயணத்தில், மகளிர் விடியல் பயணம், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், புதுமைப் பெண் திட்டம், தமிழ்ப் புதல்வன் திட்டம், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம், நம்மை காக்கும் 48 போன்ற திட்டங்களை இந்திய துணை கண்டத்திலேயே மற்ற மாநிலங்கள் பின்பற்றும் முன்னோடி திட்டங்களாக செயல்படுத்தி கொண்டுவருபவர் முதலமைச்சர் அவர்கள்.

புதியதாக உருவாக்கப்பட்ட திருப்பத்தூர் மாவட்டத்திற்கு பல்வேறு வளர்ச்சித் திட்டங்களைக் கொண்டு ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்தி வருபவர் மாவட்டத்தின் அமைச்சர் எ.வ. வேலு. கழக ஆட்சியில் திருப்பத்தூர் சட்ட மன்றத் தொகுதியில் துணை முதலமைச்சர் அவர்கள், திருப்பத்தூர் தொகுதியில் விளையாட்டு வீரர்கள் நலன் கருதி ரூ.18 கோடி மதிப்பீட்டில் மாவட்ட விளையாட்டு அரங்கம் அமைத்துக் கொடுக்க அரசாணை வெளியிட்டவர் நம்முடைய துணை முதலமைச்சர் அவர்கள்.

நீண்டகால கோரிக்கையாக இருந்த திருப்பத்தூர் அரசு தாலுக்கா மருத்துவமனையினை மாவட்ட தலைமை மருத்துவமனையாக தரம் உயர்த்தியதோடு, ரூ.50 கோடி மதிப்பீட்டில் 6 மாடிக் கட்டடமும், MRI scan மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களை புதியதாக அமைத்துக் கொடுத்த கழக அரசிற்கு நன்றி.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களால் வெளியிடப்பட்டு, கிடப்பில் போடப்பட்ட திருப்பத்தூர் நகர புறவழிச் சாலைக்கு கழக ஆட்சியில் மீண்டும் போக்குவரத்து நெரிசலை தீர்க்கும் வகையில், இப்பணியினை மேற்கொண்ட நம்முடைய நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களுக்கும், தொகுதி மக்கள் சார்பாக பாராட்டுக்கள்.

60 ஆண்டுகளாக நிர்வாக தடைகளின் காரணமாக வெங்களாபுரம் ஊராட்சியிலும், திருப்பத்தூர் நகரம், இந்திரா நகர் பகுதியில் உள்ள 200 வீடுகளுக்கும் பட்டா வழங்காமல் இருந்தது, கழக ஆட்சியில் பட்டா வழங்க ஆவன செய்தது அப்பகுதி மக்களிடம் பெரும் வரவேற்பை பெற்றுள்ளது. நம்முடைய உணவுத் துறை சார்பாக இரயில்வே இருப்பு மேம்பாலங்கள், ஆற்றுப் பாலங்கள் என 3 கிலோ மீட்டருக்குமேல் கடந்து சென்று நியாய விலைக் கடைகளில் பொருட்களை வாங்கி வந்த நிலையில், அவர்களின் குடியிருப்புகளுக்கு அருகாமையிலேயே, என் தொகுதியில் 20-க்கும் மேற்பட்ட நியாய விலைக் கடைகளை திறந்து மக்களின் துயரை போக்கிய நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி.

கந்திலி மற்றும் திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளுக்கு 10 ஆண்டுகளுக்கும் மேலாக சாலை அமைக்கப்படாமல் போக்குவரத்திற்கு சிரமப்பட்டு வந்த நிலையில், பெரும்பகுதி சாலைகளை முதலமைச்சரின் கிராம சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின்கீழ் புதுப்பித்துக் கொடுத்ததால் அதில் மக்கள் மகிழ்வோடு பயணிக்கிறார்கள். இவைகளன்றி, அரசின் அனைத்து துகைளின் வாயிலாக பணிகளை நிறைவேற்றித் தந்த முதலமைச்சர் அவர்களுக்கும், அமைச்சர் பெருமக்களுக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஊரக வளர்ச்சித் துறை கிராமப்புற மக்களின் வாழ்வாதாரத்தை நிர்ணயித்து, அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்து, அரசு மக்களோடு நேரடி தொடர்பில் 24 மணி நேரமும் உள்ள தலையாய துறையாகும். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இத்துறைக்கு பொறுப்பேற்று செயல்பட்டமை இத்துறைக்கு மகுடம் சூட்டியதாக விளங்கியது.

பெரியார் நினைவு சமத்துவபுரம், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், கலைஞரின் கனவு இல்லம், முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டம், நமக்கு நாமே திட்டம், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம், பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம், மாநில அரசின் பங்களிப்புடன் பிரதம மந்திரி வீடு வழங்கும் திட்டம், மாநில அரசின் பங்களிப்புடன் பிரதம மந்திரி கிராம சாலைகள் திட்டம், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம், நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம், Jal Jeevan Mission போன்ற எண்ணற்ற திட்டங்களை குக்கிராமங்கள் வரை கொண்டு சேர்த்து அரசிற்கு பெருமை சேர்க்கும் துறை ஊரக வளர்ச்சித் துறை.

கடந்த மானியக் கோரிக்கையில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக, கிராம ஊராட்சிமன்ற அலுவலகக் கட்டடங்கள், ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள், திட்ட இயக்குநர் குடியிருப்பு, அடிப்படை கட்டமைப்புகளை மேம்படுத்தி, பராமரிப்புப் பணிகள் மேற்கொண்டு பள்ளிகள் பழுதுபார்த்தல், புதுப்பித்தல், சுற்றுச்சுவர் கட்டுதல், சிறுபாலங்கள், நியாய விலைக் கடைகள், paver block சாலைகள், அங்கன்வாடி கட்டடங்கள் ஆகியவை புதியதாக அமைக்கப்பட்டு, தெருவிளக்குகள் முறையாக பராமரித்து, சீரான குடிநீர் வழங்கியும், ஊரக பகுதிகள் கழக ஆட்சியில் மின்னுகிறது.

துணை முதலமைச்சர் அவர்கள் கடந்த நிதிநிலை அறிக்கையில் ஊரக வளர்ச்சித் துறையின்கீழ் அறிவிப்பு வெளியிட்டு, நிதி ஒதுக்கியதன் பலனாக, 7,000 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு தலா 1 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் வீதம் சமுதாய முதலீட்டு நிதி வழங்கப்பட்டுள்ளன. 90 கோடி ரூபாய் செலவில் 40,000 கிராமப்புற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புடன்கூடிய திறன் பயிற்சி வழங்கப்பட்டுள்ளன. ஊரக வளர்ச்சிப் பகுதிகளில் 3 இலட்சத்து 29 ஆயிரம் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்குப் புத்தாக்கப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளன. மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 10 கோடி சுழல் நிதி வழங்கப்பட்டுள்ளது.

கிராமச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம்!

இதேபோன்று, பல திட்டங்களை ஊரக வளர்ச்சித் துறையின் சார்பாக செயல்படுத்தியதில், மகளிர் மனதில் கழக அரசு நீங்கா இடம் பிடித்துள்ளது. இந்த நிதிநிலை அறிக்கையில் ஊரக வளர்ச்சித் துறை வாயிலாக நம்முடைய கலைஞர் கனவு இல்லம் கட்டித் தரப்படும் என்று அறிவித்ததற்கு, வாழ்வில் ஒரு வீடு கட்டமுடியாதா! என்று ஏங்கிய மக்களுக்கு இது ஒரு வரப்பிரசாதம். முதலமைச்சர் கிராம சாலைகள் மேம்பாடு திட்டத்தில் 6,100 கி.மீ. சாலைகள் 2,200 கோடி ரூபாயில் புதுப்பிக்கப்படும் என்பது போற்றுதலுக்குரியது. தொடர் பராமரிப்பு செய்ய இயலாத வீடுகளுக்கு, ரூபாய் 2 இலட்சத்து 40 ஆயிரம் தொகை மானியமாக வழங்கப்படும் என்பது வரவேற்கத்தக்கது.

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் 2-ன்கீழ் 2025-2026 ஆம் ஆண்டு 2,329 கிராம ஊராட்சிப் பணிகள் மேற்கொள்ளப்படும் என கழக அரசு அறிவித்தது மக்களின் வரவேற்பைப் பெற்றுள்ளது. நூறு நாள் வேலைத் திட்டத்தை செயல்படுத்துவதில் தமிழ்நாடு அரசு முன்னோடி மாநிலமாக திகழ்கிறது.

நூறு நாள் வேலைத் திட்டத்தை பேரூராட்சிக்கும் விரிவுப்படுத்தப்படும் என்பது வரவேற்கத்தக்கது. நூறு நாள் வேலை செய்த தொழிலாளர்களுக்கு 3,796 கோடி ரூபாயை ஒன்றிய அரசு வழங்காமல் உள்ள நிலையில், பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முத்தமிழறிஞர் கலைஞர் ஆட்சிக்காலத்தில் இதேநிலை வந்த போது, 'கஜானா காலி களஞ்சியம் காலி ஆனால், இந்த கருணாநிதியின் மூளை காலியாக இல்லை' (மேசையைத் தட்டும் ஒலி) என்று கூறிய நம்முடைய அன்புத் தலைவர் அவர்கள் மாநில நிதிகளைக் கொண்டு திட்டங்களைத் தீட்டி தந்தவர் நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

தலைவர் வழியில் வந்த நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இவ்வளவு நிதி நெருக்கடியிலும் அனைத்து ஊராட்சிகளுக்கும், தேவையான நிதிகளை தமிழ்நாடு அரசு ஊரக வளர்ச்சித் துறைக்கு ரூ.29,475 கோடி ஒதுக்கியமைக்கு மனதாரப் பாராட்டுகிறேன்.

சட்டக் கல்லூரி!

நன்மைத் தரும் பலத் திட்டங்களை தாய் உள்ளத்தோடு செயல்படுத்திவரும் நம்முடைய அரசு கிராம ஊராட்சிகளில் பணிபுரியும் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி operator-களின் எண்ணிக்கை போதுமான அளவு இல்லாததால், புதிய operator-களை நியமனம் செய்யவும், இரவு பகல் பாராமல் பணிபுரியும் இவர்களுக்கு கூடுதல் ஊதியம் வழங்கிடவும், தூய்மைக் காவலர்கள் போதுமான அளவில் இல்லாததால் தூய்மைக் காவலர்களை நியமித்திடவும், தமிழ்நாடு முழுவதிலும் உள்ள அனைத்து ஊராட்சி பகுதிகளிலும் பழுதடைந்த மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகளுக்கு பதிலாகப் புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தந்திடவும், நூறு நாள் வேலைத் திட்டத்தில் மழைக் காலங்களில் ஆங்காங்கே, நூறு நாள் வேலைத் திட்டத்தில் மாநிலம் முழுவதும் செடிகளை நட்டுத் தந்திடவும், கிராம ஊராட்சி செயலாளர்கள் காலி பணியிடங்களை நிரப்பிட வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

வேலை வாய்ப்பினை வழங்கும் நோக்கில் எங்களுடைய மாவட்டத்தில் சென்னை-பெங்களூரு தேசிய நெடுஞ்சாலையில் கேதண்டபட்டி ஊராட்சிப் பகுதியில் புதியதாக ஒரு SIPCOT அமைத்துத் தந்திடவும், மேலும், திருப்பத்தூர் தொகுதியில், மாவட்ட மருத்துவமனையை மையமாகக் கொண்டு புதியதாக செவிலியர் பயிற்சி (School of Nursing) தொடங்கிடவும், திருப்பத்தூர் மாவட்ட நகரத்தை மையமாகக் கொண்டு ஒரு சட்டக் கல்லூரி அமைத்துத் தந்திடவும்,

திருப்பத்தூர் தொகுதியில் தொழில்நுட்ப பூங்காவை அமைத்துத் தந்திடவும், 15 ஆயிரம் எக்டர் சாகுபடியுள்ள திருப்பத்தூர் ஒன்றியத்தில் ஏற்கெனவே மாற்றப்பட்ட வேளாண் உதவி இயக்குநர் பணியிடத்தை மீண்டும் உருவாக்கித் தந்திடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும். 2026-லேயும் திராவிட முன்னேற்றக் கழகம் வெல்லும்.

தொகுதிக் கோரிக்கைகள்:

திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூர் நகராட்சி பழைய பேருந்து நிலையத்தில் தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாட்டு கழகம் லிமிடெட் (TUFIDCO) வாயிலாக வணிக வளாகக் கட்டடம் கட்டி கொடுக்க வேண்டும்.

திருப்பத்தூர் நகரம் தூய நெஞ்சக்கல்லூரி முதல் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் தருமபுரி-கிருஷ்ணகிரி பிரிவு சாலை வரை உயர்மட்ட மேம்பாலம் அமைத்திட வேண்டும்.

கந்திலி ஒன்றியம் நத்தம் கிராமம் பர்கூர் துலா ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்டி கொடுக்க வேண்டும்.

கந்திலி ஒன்றியம், நத்தம் ஜுராஹராஸ்வரன் ஆலயம் குரும்பேரிசென்னகேசவ பெருமாள் கோயில், மற்றும் செல்லரபட்டி காளியம்மன் கோயில், ப.முத்தம்பட்டி சென்னகேசவ பெருமாள் கோயில் ஆகிய பழமை வாய்ந்த ஆலயங்களுக்கு கோவில் திருப்பணி மேற்கொண்டு குடமுழுக்கு நடத்தி கொடுக்க வேண்டும்.

திருப்பத்தூர் புறவழிச் சாலை திட்டத்தில் திருப்பத்தூர் நகரின் ஊடே செல்லும் தேசிய நெடுஞ்சாலை எண். 179A-வையும் இணைக்கும் விதமாக புறவழிச்சாலையின் நீளத்தை நீட்டித்து இரயில்வே மேம்பாலங்கள் அமைத்து, இத்திட்டத்தை செயல்படுத்த வேண்டும்.

கந்திலி ஒன்றியம் மற்றும் திருப்பத்தூர் ஒன்றியங்களில் உள்ள ஊராட்சிப் பகுதிகளை திருவண்ணாமலை கூட்டுக்குடிநீர் திட்டத்தில் இணைத்து குடிநீர் வழங்கிட வேண்டும்.

திருப்பத்தூர் நகரம் 36வது வார்டு பகுதியில் 1 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட புதிய மேல்நிலை நீர் தேக்கத் தொட்டி அமைத்து காவேரி கூட்டுக்குடிநீர் திட்டத்தில் குடிநீர் விநியோகித்திட வேண்டும்.

திருப்பத்தூர் நகராட்சியில் புதியதாக இணைக்கப்பட்டுள்ள 30, 31, 32, 15 ஆகிய வார்டுகளுக்கு ஒரு லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து புதிய பைப்லைன் வாயிலாக இந்த நான்கு வார்டுகளுக்கு காவேரி கூட்டுக்குடிநீர் விநியோகித்திடும் பணி நகராட்சி நிர்வாகத்துறை வாயிலாக மேற்கொள்ள வேண்டும்.

திருப்பத்தூர் ஒன்றியம், கதிரம்பட்டி ஊராட்சியில் 1 கோடி மதிப்பிலான புதிய சமுதாயக்கூடம் அமைக்கும் பணி ஊரக வளர்ச்சித்துறை வாயிலாக அமைத்திட வேண்டும். பொம்மிகுப்பம் ஊராட்சி பழைய அத்திகுப்பம்-காந்திநகர் பாம்பாற்றின் குறுக்கே செல்லும் பிரதான சாலைக்கு உயர்மட்ட மேம்பால பணி ஊரக வளர்ச்சித் துறை வாயிலாக அமைத்திட வேண்டும்.

கந்திலி ஒன்றியம், நத்தம் ஊராட்சி மற்றும் எலவம்பட்டி ஊராட்சியில் புதியதாக தலா 1 கோடி மதிப்பிலான சமுதாயக்கூடம் அமைக்கும் பணியினை ஆதிதிராவிடர் நலத் துறை வாயிலாக மேற்கொள்ள வேண்டும். குரும்பேரி ஊராட்சி, குரும்பேரி பெரிய ஏரி நீர் வெளியேற்று கால்வாயின் குறுக்கே செல்லும் சாலை, களர்பதி பகுதியில் புதியதாக 1.80 கோடி மதிப்பீட்டில் மேம்பாலம் (Major Bridge) அமைக்கும் பணி மேற்கொள்ள வேண்டும்.

திருப்பத்தூர் ஒன்றியம், காக்கணாம்பாளையம் ஊராட்சி, இராஜாபாளையம் பாம்பாற்றின் குறுக்கே சிறுபாலம் அமைத்திட வேண்டும்.

திருப்பத்தூர் தொகுதி, ஜவ்வாதுமலை புதூர்நாடு பகுதியில் மின்சாரத் துறை வாயிலாக புதியதாக மின்நிர்வாக பிரிவு அலுவலகம் துவக்கிட வேண்டும்.

திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூர் ஒன்றியம் ஜவ்வாது மலை புதூர்நாடு பால் கூட்டுறவு சங்கம், திம்மணாமுத்தூர் பால் கூட்டுறவு சங்கம் ஆகிய பகுதிகளில் அரசின் சிறப்பு வளர்ச்சி திட்டத்தின் (Special Development Scheme) வாயிலாக 5000லி கொள்ளளவு கொண்ட பால் குளிர்விப்பு மையங்கள் அமைத்திட வேண்டும்.

திருப்பத்தூர் தொகுதிக்குட்பட்ட தரம் உயர்த்தப்பட்டுள்ள நடுநிலை மற்றும் உயர் நிலை பள்ளிகளில் புதியதாக சத்துணவு மையங்கள் தோற்றுவிக்க வேண்டும்.

திருப்பத்தூர் ஒன்றியம் கொடுமாம்பள்ளி முதல் சேர்க்கானூர் மலைக்கிராமம் வரை உள்ள மண்சாலையை தார்சாலையாக அமைத்திட வேண்டும்.

திருப்பத்தூர் நகரம், சிவராஜ்பேட்டை பகுதியிலும், கந்திலி ஒன்றியம் நத்தம் / செவ்வாத்தூர் ஊராட்சியில் புதியதாக துணை மின் நிலையங்கள் அமைத்திட வேண்டும்.

திருவள்ளூர் பல்கலைகழக உறுப்புக்கல்லூரியான திருப்பத்தூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் புதியதாக B.Sc., (Chemistry). M.A., (தமிழ்), M.Sc., (Physics) ஆகிய துறை பிரிவுகள் புதியதாக துவக்க வேண்டும்.

திருப்பத்தூர் வருவாய் வட்டத்தில் உள்ள அனைத்து கிராமத்திற்கு புதியதாக கிராம நிர்வாக அலுவலகங்கள் கட்டி கொடுக்க வேண்டும்.

திருப்பத்தூர் கல்வி மாவட்டம், கந்திலி ஒன்றியம், எலவம்பட்டி அரசு உயர்நிலைப்பள்ளியை மேல்நிலைப்பள்ளியாக தரம் உயர்த்த வேண்டும்.

நகராட்சி நிர்வாகத்துறை வாயிலாக திருப்பத்தூர் பெரிய ஏரி கரை அழகுபடுத்தி தடுப்புச்சுவர் அமைத்து பொழுது போக்கு பூங்கா அமைத்திட வேண்டும்.

ஜவ்வாதுமலை, புங்கம்பட்டுநாடு ஊராட்சி அரசமரத்துகொல்லை பழங்குடியினர் நல உண்டு உறைவிட நடுநிலைப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்த வேண்டும்.

திருப்பத்தூர் ஒன்றியம் மேட்டுகோனேரிகுப்பம் ஏ.கே.மோட்டூர் எம்.ஜி.ஆர். நகர், கூடப்பட்டு வவ்வால் தோப்பு ஆகிய பகுதிகளில் புதிய பகுதிநேர நியாயவிலைக் கடைகள் துவக்க வேண்டும்.

கந்திலி ஒன்றியம் செவ்வாத்தூர் புதூர் காலனி, அரவமட்ற பள்ளி தாதகுள்ளனூர் முருகர் கோயில் வட்டம், சின்னாரம்பட்டி-II எலவம்பட்டி வேல்முருகன் வட்டம், மைக்காமேடு, மேற்கத்தியனூர் அம்பேத்கர் காலனி ஆகிய பகுதிகளில் புதிய பகுதிநேர நியாயவிலைக் கடைகள் துவக்க வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

தமிழ்நாட்டை வஞ்சிக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து

தூத்துக்குடி வடக்கு மாவட்ட ஒன்றியங்களில் ஆர்ப்பாட்டம்!

மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கீதாஜீவன் அறிக்கை!

தூத்துக்குடி, மார்ச் 28 -

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது..

ஏழைய எளிய மக்களின் வாழ்வாதாரத்திற்காக ஒன்றிய அரசு நிதியின் மூலம் கொடுக்கப்பட்டு வரும் மகாத்மா காந்தி தேசிய நூறு நாள் வேலைத் திட்ட நிதியில் தமிழ்நாட்டிற்கு தரவேண்டிய ரூ.4034 கோடி மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட நிதியை வழங்காமலும் மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் தமிழ்நாட்டை தொடர்ந்து ஒன்றிய பா.ஜ.க. அரசு வஞ்சித்து வருகின்றது.

இந்நிலையில் தி.மு.க தலைவர் தளபதி அறிவித்துள்ளபடி, தமிழ்நாட்டிற்கு தரவேண்டிய மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட நிதி ரூ.4034 கோடியை

வழங்காமல் தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சித்து வரும் ஒன்றிய பாஜக அரசைக் கண்டித்து தூத்துக்குடி வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட அனைத்து கழக ஒன்றிய அமைப்புகளில் இரண்டு இடங்களில் நாளை (29.03.2025 - சனிக்கிழமை) காலை 10 மணியளவில் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடைபெறும்.

தி.மு.க சட்டமன்ற உறுப்பினர் மாவட்ட கழக நிர்வாகிகள் தலைமையில் கழக முன்னணியினர் முன்னிலையில் நடைபெறும் அந்த ஆர்ப்பாட்டங்களில் மாவட்ட, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட, கிளை கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பொதுமக்கள் அனைவரும் பங்கேற்று தமிழ்நாடு அரசை வஞ்சிக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு எதிராக தங்களது கண்டனங்களை பதிவு செய்திட வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் இடங்களின் விவரம் 1.கோவில்பட்டி மேற்கு ஒன்றியம் இனாம் மணியாச்சி 2. கோவில்பட்டி மத்திய ஒன்றியம் ஊராட்சி ஒன்றிய அலுவலகம், வட்டாட்சியர் அலுவலகம் 3. கயத்தார் மேற்கு ஒன்றியம் வானரமுட்டி, கட்டாலங்குளம் , 4.கயத்தார் மத்திய ஒன்றியம் அகிலாண்டபுரம், செட்டிகுறிச்சி, 5.கயத்தார் கிழக்கு ஒன்றியம் வடக்கு மயிலோடை ,குருவிநத்தம்,6. விளாத்திக்குளம் மேற்கு ஒன்றியம் சிவஞானபுரம், மார்த்தாண்டம்பட்டி,7.விளாத்திக்குளம் மத்திய ஒன்றியம் ஜமீன் கரிசல்குளம், பிள்ளை யார்நத்தம்,8. விளாத்திக்குளம் கிழக்கு ஒன்றியம் சூரங்குடி, குளத்தூர் 9. புதூர் மேற்கு ஒன்றியம் மேலகரந்தை, வெம்பூர், 10.புதூர் மத்திய ஒன்றியம் முத்துசாமிபுரம் சின்னவ நாயக்கன்பட்டி, 11.புதூர் கிழக்கு ஒன்றியம் கே.துரைசாமிபுரம், புதூர் 12. கோவில்பட்டி கிழக்கு ஒன்றியம் கீழ ஈரால்,கடலையூர்13.ஒட்டப்பிடாரம் கிழக்கு ஒன்றியம் பசுவந்தனை, வேப்பலோடை ஆகிய இடங்களில் நடைபெறுகிறது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா விழுப்புரம் தெற்கு மாவட்டம், விக்கிரவாண்டி கிழக்கு ஒன்றியம் சிந்தாமணி ஊராட்சியில் மாவட்ட ஒன்றியச் செயலாளர் ஜெய.ரவிதுரை தலைமையில் நடைபெற்றது விழாவில் விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி கலந்துகொண்டு பொதுமக்களுக்கு அன்னதானம், மகளிர்க்கு நலத்திட்ட உதவிகள், பள்ளி மாணவர்களுக்கு நோட்டு புத்தகம் வழங்கினார். விக்கிரவாண்டி சட்டமன்ற உறுப்பினர் அன்னியூர் அ..சிவா, மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயசந்திரன், ஒன்றிய செயலாளர்கள் வேம்பி ரவி, ஜெ.ஜெயபால், ஒன்றிய குழு தலைவர் ர.சங்கிதாஅரசி, ஒன்றிய குழு துணை தலைவர் ர.ஜீவிதா, மாவட்ட கவுன்சிலர் மீனா வெங்கடேசன், பேரூராட்சி துணை தலைவர் ச.பாலாஜி, எத்திராசு, மற்றும் மாவட்ட சார்பு அணி நிர்வாகிகள், ஊராட்சி மன்ற தலைவர்கள், கிளைச் செயலாளர்கள் மற்றும் பலர் உடனிருந்தனர்.

திருச்சி தெற்கு மாவட்டத்தில் - அனைத்து ஒன்றியங்களிலும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்!

மாவட்டச் செயலாளர் – அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிவிப்பு!

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள் தலைமையில், 09-03-2025 அன்று சென்னை, அண்ணா அறிவாலயம், கழக அலுவலகத்தில் நடைபெற்ற "தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில்" கழக மக்களவை - மாநிலங்களவை உறுப்பினர்கள் மத்தியில் உரையாற்றும்போது, "தமிழ்நாடு மாநில நலன் குறித்து கேள்விகள் எழுப்பி, அதற்குரிய பதிலை ஒன்றிய அரசிடம் பெற வேண்டும்" என்றும்; அத்துடன் 'ஒன்றிய அரசு கடந்த நான்கரை மாதங்களாக தமிழ்நாட்டிற்கு தரவேண்டிய ரூ.4034 கோடி அளவுக்கு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட(MGNREGA) நிதியை வழங்காதது' குறித்து கேள்வி எழுப்பிட வேண்டும் என்று அறிவுரை வழங்கினார்.

கழகத் தலைவர் அவர்களின் அறிவுரைக்கிணங்க, "ஒன்றிய அரசு கடந்த நான்கரை மாதங்களாக தமிழ்நாட்டிற்கு தரவேண்டிய ரூ.4034 கோடி அளவுக்கு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட(MGNREGA) நிதியை வழங்காததது குறித்து 25.03.2025 அன்று தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் கேள்வி எழுப்பிய போது, அதற்கு எவ்வித பதிலையும் தராமலும் - தமிழ்நாட்டிற்கு தரவேண்டிய ரூ.4034 கோடி அளவுக்கு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட (MGNREGA)நிதியை வழங்காமலும், மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சித்து வரும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து நாளை (29.3.2025- சனிக்கிழமை) காலை 10.00 மணியளவில் திருச்சி தெற்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றிய கழகங்களிலும் தலா இரண்டு இடங்களில் 100 நாள் வேலைவாய்ப்பால் பயன்பெறுவோரைத் திரட்டி "மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்"நடைபெறும்.

இந்த நிகழ்வில் கீழ்க்கண்ட அட்டவணைபடி, ஒன்றிய கழக செயலாளர் தலைமையில்,திருச்சி தெற்கு மாவட்ட கழகத்தால் ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் அனுப்பபடும் பிரதிநிதிகள் முன்னிலையில், இந்த கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது. இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட, ஒன்றியகிளைக் கழகச் செயலாளர்கள் - நிர்வாகிகள், அனைத்து அமைப்புகளில் உள்ள அணிகளின் நிர்வாகிகள், முன்னாள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளிட்ட அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு தமிழ்நாடு அரசை வஞ்சிக்கும் ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசுக்கு தங்கள் கண்டனத்தை பதிவு செய்திட வேண்டுமென கேட்டுக் கொள்கின்றேன்.

29.3.2025 சனிக்கிழமை காலை 10.00மணி

ஒன்றியம்	தலைமை	ஆர்ப்பாட்டம் நடைபெறும் ஊராட்சி - இடங்கள்	மாவட்ட கழகத்தில் இருந்து சிறப்புரையாற்ற அனுப்பப்படும் நபர்கள்
மணப்பாறை ஒன்றியம்	சி.ராமசாமி, ஒன்றிய கழக செயலாளர்	1.உசிலம்பட்டி ஊராட்சி மில்கேட், 2. புத்தாநத்தம் ஊராட்சி - புத்தாநத்தம்	அ.த.த. செங்குட்டுவன், (மாவட்ட துணை செயலாளர்) செ.பன்னீர் செல்வம், (பொதுக்குழு உறுப்பினர்)
வையம்பட்டி வடக்கு	ஆர்.ஸ்ரீரங்கன் ஒன்றிய கழக செயலாளர்	முகவனூர் ஊராட்சி - பெரியகுளத்து பட்டி, அணியாப்பூர் ஊராட்சி - சந்தை பேட்டை	வண